1986 ஏப்ரல் 26]

மூலம் மின் உற்பத்தியைச் செய்ய அரசு முன்வருமா? நாகை தெர்மல் பவர் ப்ளாண்ட் எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒரு கிலோவாட் ரூ. 10,000 என்றால், ஒரு மெகவாட் உற்பத்திக்கு என்னவாகும் என்பதை அந்த நிபுணர்களிடத்திலே மாண்புமிகு உறுப்பினர் கேட்டுத் தெரிந்துகொண்டு, இந்த சிறிய திட்டங்கள் சிக்கனமானதா என்பது பற்றிய முடிவிற்கு வர வேண்டும். காற்று சுழற்சி மூலம் மின்சார உற்பத்தி செய்ய வேண்டுமென்பது பற்றிய விவரங்களை திட்டத் துறை அமைச்சர் மூலமாக, தஞ்சை மாவட்டமானாலும் அல்லது தமிழகத்திற்கேயானாலும் பெற்றுக் கொள்வது சாலச் சிறந்தது.

ஜெயங்கொண்டம் பகுதியில் மின் இணைப்புகள்.

572—(*வினா எண். 6626)— டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டம் சட்டமன்ற பகுதிக்கு உட்பட்ட கிராமங்களில் எத்தனை கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை?

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் சட்டமன்ற பகுதிக்கு உட்பட்ட எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு விட்டது.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் சட்டமன்றப் பகுதிக்கு உட்பட்டு, 20 பஞ்சாயத்துக்கள் உள்ளன. கிட்டத்தட்ட 248 கிராமங்கள் உள்ளன. இன்னும் புதியதாக வயல் வெளிகளில், தோட்டங்களில் கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு மின்சார இணைப்பு தரப்படவில்லை. அரசு மூலமாக கட்டப்பட்ட வீடுகளுக்கும் மின் இணைப்பு தரப்படவில்லை. அவற்றுக்கு எல்லாம் அரசு தனியாக ஒரு தாக்கீது அனுப்பி, உடனடியாக மின் இணைப்பு கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, புதிய குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்குவதைப் பொறுத்தவரையில், ஒன்று வீட்டிற்கு மின்சாரம் வேண்டும்

என்று மனுக்கள் கொடுத்தால், மின்சாரம் வழங்குகிறோம். வீதிகளுக்கு மின்சாரம் வேண்டும் என்று ஊராட்சி ஒன்றியங்கள் தீர்மானம் போட்டு அனுப்பினால், அதற்குரிய வரைப்படங்கள் போட்டு அனுப்பினால், நாம் மின்சாரம் தருகிறோம். மின்சார வாரியம் தரலாம். அதுதான் வழி.

டாக்டர் ந. மாசிலாமணி : தலைவர் அவர்களே, தாழ்த் தப்பட்ட சமுதாயத்திற்காக கட்டித் தரப்படுகின்ற, ஆர்.எல். ஈ.ஜி.பி., என்.ஆர்.ஈ.பி., தாட்கோ மூலமாக கட்டப்படு கின்ற காலனிகளுக்கு, மின் இணைப்பு தரப்படுவதில்லை. எனவே அந்த வீடுகளுக்கு அரசு இலவசமாக மின் இணைப்பு தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, அந்த வீடுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்ற வகையில் அண்மையில் அரசு உத்திரவு பிறப்பித்திருப்ப தாக எனக்கு நினைவு.

250 K. V. டிரான்ஸ்பார்மர்கள்.

கு. கா. வி. எண். 7 (*வினா எண் 9072)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு மின் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 250 கே. வி. சக்தி கொண்ட டிரான்ஸ்பார்மர்கள் அரசிடம் இருப்பில் இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 250, கே. வி. சக்தி கொண்ட டிரான்ஸ்பார்மர்கள் பழுதடைந்து விட்டால் அதையே பழுதுபார்த்து வைக்கவேண்டியிருக்கிறது. இதற்கிடைப்பட்ட காலத்திலே தண்ணீர் இல்லாமல் பயிர்கள் வாடுவதால் உற்பத்தி குறைந்து அதன் மூலமாக விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, 250 கே.வி. டிரான்ஸ்பார்மர் களுக்குப் பதிலாக 100 கே. வி. டிரான்ஸ்பார்மர்களை வைப்ப தால் அந்த நேரத்திலே மின் சப்ளை குறைவதால் மோட்டார்